**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>**

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.70/2019 நாள்: 20.02.2020

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன், பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

பெயர் : சுப்பிரமணி

தந்தை பெயர் : முனியப்ப கவுண்டர்

கிராமம் : தாலுக்கா :

வயது : வேலை :

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் என்னுடையதுதான்.

01. 11.10.2013 தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும்,

02. 29.08.2019 தேதியிட்ட கணிணி சிட்டா இணைய பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆகவும்,

03. சுப்பிரமணி பெயரில் கிராம நிர்வாக அலுவலர் வழங்கப்பட்ட அடங்கல் கணக்கு வா.சா.ஆ.3 ஆகவும்,

04. 27.08.2019 தேதியிட்ட புல எண்.18 ற்கான இணைய பதிவிறக்க புல வரைபடம் வா.சா.ஆ. 4 ஆகவும்,

05. வழக்கு சொத்தின் சந்தை மதிப்பீடு இணைய பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆகவும்,

06. சுப்பிரமணி பெயரில் செலுத்தப்பட்ட கந்தாய ரசீதுகள் அசல் 2 எண்ணிக்கை வா.சா.ஆ.6 ஆகவும்,

07. 27.08.2019 தேதியிட்ட இணைய பதிவிறக்க வில்லங்க சான்று வா.சா.ஆ.7 ஆகவும்,

08. 4-ம் பிரதிவாதிக்கு வாதி அளித்த மனு கை நகல் வா.சா.ஆ.8 ஆகவும்,

09. 28.08.2019 தேதியிட்ட வாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பதிவு தபாலில் அனுப்பி வைத்த மனு கை நகல் வா.சா.ஆ.9 ஆகவும்,

10. 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மனு சார்பு செய்ததற்கான அஞ்சல் ரசீதுகள் 4 எண்ணிக்கை வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்று பிராதில் வேண்டப்பட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.